வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 04.01.2025 சனிக்கிழமை இதழ் : 04 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# அநுரவின் சீன பயணம் புதுடில்லி அதீத கவனம்

## இலங்கை ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பளிக்க தயாராகின்றது பீஜிங்

கொழும்பு, ஜனவரி 04

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கு இம்மாத நடுப்பகுதியில் மேற்கொள்ள உள்ள அதிகாரபூர்வ பயணம் மற்றும் அது தொடர்பில் வெளியாகும் செய்திகள் குறித்து புதுடில்லி தீவிர அவதானம் செலுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறியமுடிகிறது.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டதோ அதேபோன்று சீனாவுக்கான பயணமும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இராஜதந்திர வட்டாரத்தில் அவதானிக்கப்படுகிறது.

இலங்கையின் அரசியலில் செல்வாக்கும் செலுத்தும் 11

# தமிழ்த் தேசிய எம்.பிக்களை சந்திக்கிறார் கஜேந்திரகுமார்

## செவ்வாயன்று திகதி தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜன. 04

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் கலந்துரையாடி அச்சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருப்பதாகவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் முடிவுகளை அடுத்து எதிர்வருங்காலத்தில் அரசாங்கத்தினால் 11

# வடக்கு காணி ஆணையாளர் அலுவலக புதிய கட்டடம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஜன. 04

வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் புதிய கட்டடம் மக்கள் சேவைக்காக கிளிநொச்சியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மாகாண காணி ஆணையாளர் அ. சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம் கலந்துகொண்டு குறித்த 11



# அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரிய போராட்டத்துக்கு பொலிஸார் நேற்று தடை!

கிளிநொச்சி, ஜன. 04

நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சி நகரில் பொதுச் சந்தைக்கு அருகில் கையெழுத்து போராட்டம் ஒன்று வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போராளிகள் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு அருகில் குறித்த கையெழுத்துப் போராட்டம் மேற்கொள்ளத் தயாரான போது அங்குவந்த கிளிநொச்சி பொலிஸார் அனுமதி 11



# வங்குரோத்து நிலையில் இருந்த நாடு சில மாதங்களில் காப்பாற்றப்பட்டது!

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி

கொழும்பு, ஜன. 04

வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை ஒரு சில மாத காலப் பகுதிக்குள் இவ்வாறானதொரு நிலைக்கு கொண்டுவர முடிந்ததை எண்ணி மகிழ்ச்சியடைய வேண்டும் என கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

கடனுதவி பெற முடியாமல், துறைமுகத்துக்கு வருகைத் தந்த எரிபொருள் கப்பலுக்குப் பணம் செலுத்த முடியாமல் இருந்த நாடு இன்று நாடாக மூச்சு விட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் 11

# அமெரிக்காவில் பஸிலுக்கு பெருமளவு சொத்துக்கள்!

## சி.ஐ.டியில் வீரவன்ஸ வாக்குமூலம்

கொழும்பு, ஜன. 04

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு அமெரிக்காவில் பெருமளவிலான சொத்துகள் உள்ளன. அவை தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை ஆரம்பிக்குமாக இருந்தால் மேலும் தகவல்களை வழங்க தயாராக இருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார். 11

# மன்னார் காற்றாலை மின் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானம்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நேற்று சலசலப்பு

மன்னார், ஜன. 04

மன்னார் பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவை நிறுத்தப்படவேண்டும் என மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் மன்னார் ரயில் போக்குவரத்து சேவைகள், திண்மக் கழிவு அகற்றுதலில் உள்ள சிக்கல்கள், காற்றாலை 11

# ஜனாதிபதியின் சீன விஜயம் இரு உறவை வலுப்படுத்தும்!

## சீனத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 04

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் சீனாவுக்கான முதலாவது விஜயத்துக்கான தயார்ப்படுத்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட சீனத் தூதுவர் கீ சென்ஹொங், இந்த வரலாற்று நிகழ்வு இரு தரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தும் என தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவை 11

# வவுனியாவில் மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

- குமார கோகுலன் -

வவுனியா, ஜன. 04

வவுனியா குடியிருப்பில் மின்சாரம் தாக்கி ஒருவர் பலியாகியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குடியிருப்பு விநாயகர் ஆலயத்தின் தீர்த்தக் கேணியை மின்சாரத்தில் இயங்கும் நீர் இறைக்கும் இயந் திரங்களின் மூலம் நீரினை அகற்றி துப்புரவு செய்யும் போது குறித்த சம்பவம் 11

# அமெரிக்காவுக்கான இலங்கை தூதர் பதவியில் தொடரவுள்ளார் சமரசிங்க!

கொழும்பு, ஜன. 04



அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக பணி யாற்றிவரும் முன்னாள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவை அந்தப் பதவியில் தொடர்ந்து அமர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையின் காரணமாக இந்த 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுரையாளர்கள் பற்றாக்குறையால் பல்கலைக்கழகக் கட்டமைப்பு பாதிப்பு

## உள்ளூராட்சி அமைச்சர் சுட்டிகாட்டு

கொழும்பு, ஜன. 04

நாட்டில் பல்கலைக்கழக கட்டமைப்பு விரிவுரையாளர்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, வெற்றிடமாக உள்ள சில பதவிகளுக்கு தகுதியான நபர்களை நியமிக்க அதிகாரிகள் கடுமையாகப் போராடி வருவதாகவும் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் ஊதியத்தில் விதிக்கப்பட்ட தனியாள் வரி போன்ற காரணங்களினால் 1,000 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

சில பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்க முடியவில்லை. நாங்கள் நேர்காணலை நடத்தும் போது தகுதியானவர்கள் வருவதில்லை.

ஏனெனில் அவர்களுக்கு பல்கலைக்கழக கட்டமைப்புக்கு வெளியே சிறந்த ஊதியம் வழங்கப்படுகிறது. உதாரணமாக, சில மருத்துவ பீடங்களில் பேராசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. கடந்த அரசாங்கம் அதிக வரி விதித்ததால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதனால் இளம் விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

எனவே, வரி விதிப்பில் திருத்தம் செய்வது பல்கலைக்கழக கட்டமைப்புக்கு விரிவுரையாளர்களை ஈர்க்கும் ஒரு நடவடிக்கையாக இருக்கும். நாட்டை விட்டு வெளியேறியவர்களும் அவர்களுக்குச் சாதகமான சூழலை உருவாக்கியவுடன் திரும்பி வருவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்களை ஈர்ப்பதற்கான ஒரே வழி சம்பள உயர்வு அல்ல. வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஊதிய அதிகரிப்பு நோக்கத்தை நிறைவேற்றாது. அதிக வரி விதிப்பு தகுதியுள்ளவர்கள் பல்கலைக் கழகங்களில் சேருவதையும் தடுக்கிறது. தற்போதைய நெருக்கடிக்கு பதிலளிப்பதில் நாம் ஒட்டுமொத்த அணுகு முறையை உருவாக்கவேண்டும் - என்றார்.(அ)



# வித்தியானந்த கல்லூரி அதிபரை இடமாற்றக் கோரிப் போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 04

முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி அதிபரை இடமாற்றம் செய்யக் கோரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அதிபர் கல்லூரியின் வளர்ச்சியை சீர்குலைப்பதாகவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருப்பதாகவும், அவரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறும் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பாடசாலை நுழைவாயிலில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்ட இடத்துக்குச் சென்ற அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் போராட்டத்துக்கான காரணங்களை கேட்டறிந்தார். அதன் பின்னர் போராட்டத்திற்கான காரணம் தொடர்பான மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் இது ஒரு தேசிய பாடசாலை ஆகையினால் மாகாணத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் தான் இருக்கின்றது. எனவே மத்திய அரசின் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இந்த மகஜரை அனுப்புவதாகவும், அதன் பிரதியை சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கு வழங்கி இதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்வதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

# தேசியக் கொடியை தவறான முறையில் ஏற்றிய பிரதி அமைச்சர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 04

தேசியக் கொடியை தவறான முறையில் ஏற்றியதாக விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாமல் கருணாரத்ன தேசியக் கொடியை தவறான முறையில் ஏற்றியதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள விவசாய அமைச்சில் இடம்பெற்ற ஆங்கில புத்தாண்டு நிகழ்வுகளின்போதே தேசியக் கொடி தவறான முறையில் ஏற்றப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தேசியக் கொடியை இரண்டு வர்ணங்களுக்கு அருகில் கட்டி ஏற்றுவது வழக்கம் என்றும், ஆனால் இந்தமுறை சிங்கத்தின் வால் பக்கத்தில் கட்டி ஏற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பிலான விரிவான விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# 'விநாயகரும் பெருங்கதை விரதமும்' சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.04

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் பிள்ளையார் பெருங்கதை விரத பூர்த்தி தின விசேட உற்சவ நிகழ் வின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத்தலைவர் கலாநிதி பிரம்பசிறீ ம. பாலகைலாசநாதக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவை "விநாயகரும் பெருங்கதை விரதமும்" என்னும் விடயப்பொருளில் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ. த. குமரன் நிகழ்த்தவுள்ளார்.(எ)

# ரோஹிங்யா அகதிகளை மியன்மாருக்கு நாடு கடத்துவது குறித்து அரசு ஆராய்வு

கொழும்பு, ஜன. 04

மியன்மாரின் ரோகிங்யா புகலிடக்கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

முல்லைத்தீவு கடற்பரப்புக்கு அண்மையில் வந்து சேர்ந்த ரோஹிங்யா புகலிடக் கோரிக்கையாளர்களைநாடு கடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ள அமைச்சர், சட்ட ரீதியான நடைமுறைகள், கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின்னர் இது குறித்து தீர்மானிக்கவுள்ளதாக கூறினார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சு மியன்மார் அரசாங்கத்துடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளது என தெரிவித்த அமைச்சர், இலங்கையில் உள்ள ரோகிங்யா புகலிடக் கோரிக்கையாளர்களின் பெயர் விவரங்களை ஏற்கனவே மியன்மார் அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாகவும் கூறினார். (அ)

# பூஸா சிறைக்குள் விசேட சோதனை

கொழும்பு, ஜன. 04

பூஸா சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கைதி ஒருவரின் சிறைக் கூண்டிலிருந்து இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது, கையடக்கத் தொலைபேசி, சார்ஜர், டேட்டா கேபிள் மற்றும் சிம் அட்டை உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைப்பற்றப்பட்ட பொருட்கள் அனைத்தும் மேலதிக விசாரணைகளுக்காக சிறைச்சாலை பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டன.

# விபத்தினால் மூளைச்சாவு அடைந்த ஈழ அகதியின் உடல் உறுப்பு தானம்!

சென்னை, ஜன, 04

மூளைச்சாவடைந்த ஈழ அகதி களின் உடல் உறப்புகள் தானம் செய்யப்பட்டதால், எழுவர் மீள் வாழ்வு பெற்றுள்ளமை பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புதுச்சேரி அருகே தமிழக பகுதி யான கீழ்புத்துப்பட்டு இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்தவர் விஜயகுமார். இவரது 19 வயதான மகன் பிரேம் குமார், கடந்த முத ாம் திகதி விபத்துக்குள்ளானார்.

இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக மூலக்குளம் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். அங்கு அவர் மூளைச் சாவு அடைந்தார்.

அதனால் அவரது உடல் உறுப்புகளான சிறுநீரகம், கல்லீரல், இதயம், நுரையீரல் மற்றும் இரு கண்களை தானம் கொடுக்க அவரது பெற்றோர் முன்வந்தனர்.

அதனைத் தொடர்த்து, 5 உறுப்புகளும் அறுவைச் சிகிச்சை மூலம் எடுக்கப்பட்டது. இதன் மூலம் எழுவர் உயிர் பிழைத்துள்ளனர்.

இறந்த இளைஞர் பிரேம் குமாரால், 7 பேருக்கு உடல் உறுப்பு தானம் கிடைக்கப் பெற்றது நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

(அ)

# "பாற்சோறு சமைக்க அரிசியற்ற சூழலை உருவாக்கியுள்ளது அரசு"

கொழும்பு, ஜன. 04

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டிலுள்ள வேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்துவதை தவிர இந்த அரசாங்கம் நாட்டு மக்களுக் காக என்ன செய்திருக்கிறது ? 2025ஆம் ஆண்டை வரவேற்ப தற்கு பாற்சோறு சமைப்பதற்கு அரிசியற்ற சூழலை மாத்திரமே இந்த அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

புதிய அரசாங்கம் ஆட்சி யைப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்துள்ளன. இந்த 100 நாட்களில் தோல்வியடைந்த ஒரு அரசாங்கமாக இதனை மக்கள் எண்ண ஆரம்பித்து விட்டனர்.

24 மணித்தியாலங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதாகக் கூறியவர்கள் 100 நாட்கள் கடந்தும் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

மூன்றில் இரண்டுக்கும் அதிக பெரும்பான்மையுடைய இந்த அரசாங்கத்தால் செய்ய முடியாததை, சிறு பெரும்பான்மையைக் கொண்டிருந்த நல்லாட்சி அரசாங்கத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தில் நாம் செய்து காட்டினோம்.

2025ஆம் ஆண்டை வரவேற்பதற்கு பாற்சோறு சமைப்பதற்கு அரிசியற்ற சூழலை இந்த அரசாங்கம் உருவாக்கியிருக்கிறது.

அரிசி ஆலை உரிமையாளர்களை மண்டியிடச் செய்வோம் என சபதமிட்ட அரசாங்கம் இன்று அரிசியின் விலையை அதிகரித்து அவர்களுக்க சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது.

யுத்த காலத்தில் கூட இவ்வாறானா பிரச்னைகள் காணப்படவில்லை. ஜே.வி.பி. கலவரத்தின் போது அரிசி ஆலைகளுக்கு தீ வைக்கப்பட்ட போதிலும், அப்போதைய அரசாங்கம் மக்களுக்கு அரிசி தட்டுப்பாட்டை எதிர்கொள்ள இடமளிக்கவில்லை.

கடந்த அரசாங்கத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டங்களை மேலும் பலப்படுத்துவதைத் தவிர இந்த அரசாங்கம் மக்களுக்காக வேறு எதனையும் செய்யவில்லை.

மக்கள் நிவாரணங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது, அரசாங்கத்தின் அமைச்சர்களும் எம்.பி.க்களும் தமக்கான தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக முரண்பட்டுக் கொண்டிருக்கின்றனர்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
04.01.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் கைதிகளின் விடுதலை

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஒரு குழுவினர் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இது போன்று கடந்த காலத்திலும் பல்வேறு அமைப்புகளால், பல கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கைகளும் அதற்குமப்பால் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இவ்வாறான நடவடிக்கைகள் ஆட்சியாளர்கள் மீது தாக்கங்களை ஏற்படுத்தியதாக கூறமுடியாது. ரணில் - மைத்திரி அரசாங்கத்திற்கும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் மிகவும் நெருக்கமான உறவிருந்த காலத்தில் தங்களின் விடுதலையை வலியுறுத்தி அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர். இது தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரன் அப்போது - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேசியிருந்தார். அவர்கள் உண்ணாவிட்டால் அவர்கள்தான் இறந்து போவார்கள் எனவே, இது போன்ற நடவடிக்கைகளை கைவிடுமாறு அவர்களுக்கு ஆலோசனை கூறுங்கள் என்று மைத்திரிபால சிறிசேன அறிவுரை கூறியிருந்தார்.

இது எதனை உணர்த்துகின்றது? இது போன்ற நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் பெரிதாக கண்டுகொள்வதில்லை. பொதுவாக அதிகாரத்தில் இருப்பவர்கள் அழுத்தங்களின் அடிப்படையில் தாங்கள் எதனையும் செய்பவர்கள் அல்லர் என்பதையே வெளியில் காண்பிக்க முற்படுவார்கள். ஆட்சியாளர்களின் பொதுவான இயல்பு அப்படித்தான் இருக்கும். குறிப்பாக சிங்கள மக்களின் வாக்கு வங்கியை இழந்துவிடக் கூடாது என்னுமடிப்படையில் தங்களின் அரசியலை திட்டமிடும் தென்னிலங்கை தரப்புக்கள், தாங்கள் ஒருபோதும் எவருடைய அழுத்தங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்லர் என்பதை காண்பிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்திருக்கின்றனர்.

அரசாங்கத்தை பொறுத்தவரையில் அரசியல் கைதிகள் என்னும் ஒரு பிரிவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை எனினும் நீண்ட காலமாக சிறையிலிருக்கும் கைதிககளை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க கருத்தில் கொண்டிருந்தார். அந்த அடிப்படையில் அவரது ஜனாதிபதிக் காலத்தில் சில கைதிகளை விடுவித்திருக்கின்றார். உண்மையில் தமிழ் அரசியல்வாதிகளின் அழுத்தங்களால் ரணில் அதனைச் செய்யவில்லை. அவ்வாறான அழுத்தங்கள் எதனையும் ரணில் மீது பிரயோகிக்கக் கூடிய ஆற்றலுடன் தமிழ் அரசியல் தரப்புக்களும் இருந்திருக்கவில்லை.


தற்போதைய சூழலில் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் தமிழ் தரப்புக்கள் பேச முடியும். அதற்கான சாதகமான சூழல் காணப்படுகின்றது. அனைத்தையும் கறுப்புக் கண்ணாடியின் வழியால் நோக்குவதை விடுத்து, அரசாங்கத்துடன் பேச வேண்டிய விடயங்களை பேசத்தான் வேண்டும். இம்முறை மாவீரர்தின நிகழ்வுகளை அரசாங்கம் தடுக்கவில்லை. ஒப்பீட்டடிப்படையில் யுத்தத்திற்கு பின்னரான மாவீரர் தின நிகழ்வுகளின் போது இம்முறை சுதந்திரமான முறையில் மக்கள் பங்குகொள்வதற்கான வாய்ப்பை அரசாங்கம் வழங்கியிருந்தது. இந்தப் பின்புலத்தில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கத்துடன் பேச முடியும். அதற்கான முயற்சியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக மேற்கொள்ள வேண்டும்.

## அனுமதிப்பத்திரம் இன்றி கற்களை ஏற்றி வந்த டிப்பரை மடக்கிப் பிடித்த இளங்குமரன் எம்.பி!

யாழ்ப்பாணம், ஜன.04

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோண மலை சிமேந்து உற்பத்தித் தொழிற்சாலைக்கு சட்டவிரோதமான முறையில் கண்டகற்களை ஏற்றிச் சென்ற டிப்பரை சாவகச்சேரி நுணா வில் பகுதியில் வைத்து வழிமறித்த பாராளு மன்ற உறுப்பினர் க. இளங் குமரன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்

அண்மைய நாட்களில் மந்துவில் பிர தேசத்தில் இருந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான கட்டடப்பொருள் விற்பனை செய்யும் வர்த்தகருக்கு சொந்தமான பாரவூர்தி மூலமாக சட்டவிரோதமான முறையில் கண்டகற்களை அகழ்ந்து செல்வதாக பிரதேச மக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.



அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் நுணாவில் பகுதியில் வைத்து குறித்த வர்த்தகருக்கு சொந்தமான டிப்பரை மறித்து சோதனை யிட்டபோது அனுமதிப்பத்திரம் இன்றி கற்கள் ஏற்றிச்சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த டிப்பர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் இளங்கு மரன் தெரிவித்தார்.

(எ-05)

## ஐந்து மாணவர்கள் படுகொலை; யாழில் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.04

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். கொக்குவிலில் உள்ள முன்னணியின் அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மூத்த போராளி பொன் மாஸ்டர் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலிகாமம் வடக்குப் பிரதேச அமைப்பாளர் ச.செல்லகாந்தன் நினைவுச் சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயல்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

## ஆயுள்வேத வைத்தியர்களின் இடமாற்றத்தில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், ஜன.04


ஆயுள்வேத வைத்தியர்களின் இடமாற்றம், வைத்தியர்களின் தற்காலிக இணைப்பு ஆகியவற்றில் வெளிப் படைத்தன்மை பேணப்பட வேண்டும் என்று ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.


இதேவேளை, ஆயுள்வேத வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களின் தரப்படுத்தல் தொடர்பான கோரிக்கையை சாதகமான முறையில் அணுகுமாறு துறைசார் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

(எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். அர சால் அனுகூலம் உண்டு. புது வேலை அமையும். அதி காரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். முயற்சி வெற்றி அடையும். சிறப்பான நாள்.

**இடபம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங் களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந் திக்க நேரிடும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள்.

**மிதுனம்**
புதிய பாதையில் பயணிக்க தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பி தருவீர்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உதவிகள் கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக் குவார்கள்.

**சிம்மம்**
விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். பிள் ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதா யமும் உண்டு. தாயார் ஆதரித்து பேசுவார். பய ணங்கள் சிறப்பாக அமையும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசி மகிழ் வீர்கள். விருந்தினர் வருகையால் வீடுகளைக் கட்டும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். வெளிவட்டாரத்தில் செல் வாக்கு உயரும்.நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சாமளிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். பழைய பிரச்னை களுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண் பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் தொடர்வதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்ல போய் பொல்லாப்பாக முடியும்.

**மீனம்**
திடீர் பயணங்கள் இருக்கும். அநாவசியச் செலவு களை குறைக்கப்பாருங்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். குடும்பத்தில் வாக்கு வாதங்கள் வந்து நீங்கும்.

# வடமாகாணத்தில் ஸார்ப் நிறுவனத்தால் 78, 375 வெடி பொருட்கள் அகற்றப்பட்டன

கிளிநொச்சி, ஜன.04

கிளிநொச்சி மற்றும் முல் லைத்தீவு மாவட்டங்களில் மனி தாபிமான கண்ணிவெடிய கற்றும் செயல்பாட்டில் ஈடு பட்டுவரும் ஸார்ப் நிறுவனத் தால் 2016 ஆம் ஆண்டு நவம் பர் மாதம் முதல் 2024 டிசெம் பர் வரையான காலப்பகுதியில் 78 ஆயிரத்து 375 அபாயகர மான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளதாக ஸார்ப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத் தின், தச்சடம்பன், அம்பகாமம், ஒலுமடு, மாங்குளம், கொக்கா வில் பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவு, தட்டுவன் கொட்டி ஆகிய பகுதிகளிலும் வெடிபொருட்கள் அகற்றியுள் ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் பிரபாத் நாரம்பனவ தெரிவித் தார்.

தொடர்ந்து ஸார்ப் நிறுவ னம் கண்ணிவெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு, அம்பகாமம், மாங்குளம், கொக்காவில், தட்டுவன் கொட்டி மற்றும் ஆனையிறவி லும் துரித கதியில் முன்னெ டுத்து வருகின்றது என்றும் அவர் கூறினார். (எ)

# வழக்கில் உள்ள நபரின் சடலத்தை தோண்டுமாறு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.04

மன்னார் நீதிமன்றத்தில் விபத்து தொடர்பான வழக்கில் உள்ள நபரான ஜேசுதாசன் ரஞ்சித்குமார் (வயது -40) என் பவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் - கல்லூண்டா யில் உள்ள சேமக்காலையில் அவரது சடலம் அடக்கம் செய் யப்பட்டது. இந்த நிலையில் உடற்கூற்று பரிசோதனைகளுக் காக அவரது சடலத்தை தோண் டுமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்க ளுக்கு முன்னர் மன்னார் - இலுப்பை கடவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காய மடைந்த குறித்த நபர் யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வந்தார். இதன்பின்னர் நவாலியில் வசித்த அவர் தொடர்பில் மன் னார் நீதிமன்றத்திலும் வழக்கு உள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்தார். அவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்ததாக மருத்துவர் ஒருவர் தெரிவித்த நிலையில் கிராம உத்தியோகத்தரும் அதற்கு இணங்க பூர்வாங்க செயல்பாடுகளை மேற்கொண்டார்.

இது இவ்வாறு இருக்கை யில் குறித்த நபர் மீதான விபத்து மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோது குறித்த நபர் அங்கு பிரசன்னமாகவில்லை. குறித்த நபர் உயிரிழந்து, அவ ரது சடலம் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்ட விடயம் அதன் பின்னரே நீதிமன்றத்தின் கவ னத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அந்தவகை யில் சடலத்தை புதைத்த பகுதி மல்லாகம் நீதிமன்றத்தின் நியா யாதிக்க எல்லைக்குள் உள்ள மையால் இது குறித்து மல் லாகம் நீதிமன்றத்துக்கு அறிவித் தல் வழங்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் குறித்த நபரின் சடலத்தை தோண்டி எடுத்து உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்புமாறு மல்லாகம் நீதி மன்றம் உத்தரவிட்டது.(எ- 05)

# கடையை உடைத்து பணம், நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.04

யாழ்ப்பாணம், கோண்டா வில் பகுதியில் வர்த்தக நிலை யமொன்றின் பூட்டு உடைக் கப்பட்டு பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளன.

குறித்த வியாபார நிலையத் தில் பணம் வைக்கும் அலுமாரி உடைக்கப்பட்டு 6 இலட்சம் ரூபாய் பணமும், மூன்றரை பவுண் நகைகளும் திருடப்பட் டுள்ளன.

குறித்த திருட்டுச் சம் பவம் அருகிலிருந்த சி. சி. ரீவி கமராவில் பதிவாகியுள்ள நிலை யில், பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வரு கின் றனர். (எ)

# சாவகச்சேரியில் வயல் கிணற்றிலிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன.04

சாவகச்சேரி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கிராம்புவில் பகு தியில் உள்ள வயல் கிணற்றி லிருந்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது.

வயலுக்கு பசளை இடச் சென்றவர்கள் குறித்த சடலத்தை கண்ட நிலையில் இது தொடர் பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

பிரேத பரிசோ தனை மற்றும் மரண விசாரணை களுக்காக சடலம் சாவ கச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

# "தனிப்பட்ட நலன்களால் பொருளாதார மத்திய நிலையத்தை இதுவரை திறக்க முடியவில்லை"

வவுனியா, ஜன.04

தனிப்பட்ட நலன்கள் முன் னிறுத்தப்பட்டமையால் பொரு ளாதார மத்திய நிலையத்தை ஆரம்பிக்க முடியாமல் உள்ள தாக வவுனியா மாவட்ட அபி விருத்தி குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமர சிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செய லகத்தில் நடைபெற்ற அபிவி ருத்தி குழு கூட்டத்தில் பொரு ளாதார மத்திய நிலையம் தொடர்பில் கலந்துரையாடப் பட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"295 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலை யமானது, சில அரசியல் தலை யீடுகள் மற்றும் இனம் சார்ந்த பிரச்னைகளாலும், வியாபா ரிகள் அல்லது தனிப்பட்ட நலனை முன்னிறுத்தியமை போன்றவற்றால் அதனை ஆரம்பிப்பதற்கு தற்போது வரை ஒரு இழுபறி நிலை காணப்படுகின்றது. மேலும், இது தொடர்பில் பல்வேறு முன்னோடி நடவ டிக்கைகள் அரசாங்க அதிபரால் முன்னெ டுக்கப்பட்ட போதும் அதனை திறக்க முடியாத நிலையே காணப்படு கின்றது.

எனவே, அடுத்த மாத நடுப் பகுதியில் இங்குள்ள பாராளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிபரும் இணைந்து இது தொடர்பில் கலந்துரையா டவுள்ளோம். அத்துடன் இந்தப் பொரு ளாதார மத்திய நிலை யத்தை திறப்பதற்கான நடவ டிக்கை அடுத்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுக்கப் படும்"- என்றார். (எ-10)

# காணாமல் போனவரை குளத்தில் தேடும் பணி தீவிரம்

கிளிநொச்சி, ஜன.04

மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் காணாமல் போன தாக பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அவரது துவிச்சக்கர வண்டி மற்றும் பாதணி ஆகியன கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் முறிப்பு குளத்தில் தேடுதல் நட வடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

கிளிநொச்சி - கோணாவில் மத்தியை சேர்ந்த குறித்த நபர் காணாமல் போனதாக பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட் டது. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தொழிலாளர், கைதிகள் வாக்குரிமையை உறுதி செய்யுங்கள்!

## ஜனாதிபதிக்கு மீண்டும் கடிதம் அனுப்பும் தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 04

**புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் சிறைக் கைதிகள் ஆகியோரின் வாக்குரிமையை உறுதி செய்யுமாறு கோரிக்கை விடுத்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மீண்டும் எழுத்துமூலமான கடிதமொன்றை அனுப்பவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றதும் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் சிறைக் கைதிகளின் வாக்குரிமையை உறுதி செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரி உத்தியோகபூர்வமான கடிதமொன்றை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த விடயம் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி மீண்டும் கடிதமொன்றை அனுப்பவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதியிடம் புலம்பெயர் தொழிலாளர் மற்றும் சிறைக்கைதிகள் ஆகியோரின் வாக்குரிமையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரியிருந்தேன். அப்போது சட்ட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கூறியதோடு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில் இந்த ஆண்டில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆகவே விரைந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் குறித்த இரு தரப்பினருக்குமான வாக்குரிமையை உறுதி செய்ய முடியும்.

அந்த வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மீண்டும் குறித்த விடயத்தை வலியுறுத்தி எழுத்துமூலமான கோரிக்கையை விடுக்கவுள்ளோம்-என்றார். (அ)

# கிளீன் சிறிலங்கா குறித்து தெளிவுபடுத்தல் அவசியம்

## பொதுஜன பெரமுன கூறுகிறது

கொழும்பு, ஜன. 04

கிளீன் சிறிலங்கா தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் அரச நிறுவனங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் கிளீன் சிறிலங்கா என்ற வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. எனினும் அந்தத் திட்டம் குறித்து அரச நிறுவனங்களும் அரச அதிகாரிகளும் தெளிவுபடுத்தப்படவில்லை.

இதனூடாக எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப் போகின்றன என்பதில் அரசாங்க அதிகாரிகள் மத்தியில் குழப்ப நிலை காணப்படுகிறது.

கிளீன் சிறிலங்கா தொடர்பில் சுற்றுநிருபத்தின் ஊடாக முறையான தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய நபர்களை கைதுசெய்வதாக தேர்தல் காலங்களில் உறுதியளிக்கப்பட்டது.

எனினும் அதற்கான நடவடிக் கைகள் எதுவும் முன்னெடுக் கப்படவில்லை-என்றார். (அ)

# 85,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதியானது

கொழும்பு, ஜன. 04

இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசி இறக்குமதி செய்ய அனுமதியளித்து நேற்று முன் தினம் வரை 85,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்ட அரிசி துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

குறித்த இறக்குமதி செய்யப்பட்ட 85,000 மெற்றிக் தொன் அரிசியில் 33,000 மெற்றிக் தொன் பச்சை அரிசியும் 52,000 மெற்றிக் தொன் புழுங்கல் அரிசியும் உள்ளடங்குவதாகவும், மேலும் சுங்கத்திற்கு அனுப்பப்பட்ட இறக்குமதி அரிசி விரைவில் விடுவிக்கப்படும் என்றும் அருக்கொட குறிப்பிட்டார்.

இந்த 85,000 மெற்றிக் தொன் அரிசியில் அரச நிறுவனமான அரச வர்த்தக பல்வேறு சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 780 மெற்றிக் தொன் அரிசியும் உள்ளடங்குவதாகவும் அவர் கூறினார்.

நாடு எதிர்நோக்கும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை தனியார் துறையினருக்கு தற்போதைய அரசாங்கம் கடந்த 4ஆம் திகதி முதல் வழங்கியுள்ளது. (அ)

# இலங்கையின் திறன் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கிறது ஆஸ்திரேலிய அரசு

கொழும்பு, ஜன. 04

இலங்கையின் திறன் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் போபால் ஸ்டீபன்ஸ் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி இடையே அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் ஆஸ்திரேலிய தூதுவருக்கு புதிய அரசாங்கத்தின் நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது.

நஷ்டத்தில் இயங்கும் பொதுத் தொழில்களை விற்பனை செய்வதற்குப் பதிலாக, பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் அந்தத் தொழில்களை மக்கள் பயன்பெறும் வகையில் சீரமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஆஸ்திரேலிய தூதுவர் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளைப் பாராட்டியதுடன், ஆஸ்திரேலியா மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் அந்தக் கொள்கைகளின்படி இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து அமைச்சரிடம் கேட்டறிந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், இரத்தினங்கள் மற்றும் நகைகள், படகு தயாரிப்பு, ஒட்டோ மொபைல் (வாகன தயாரிப்பு) போன்ற துறைகளில் பல முதலீட்டு வாய்ப்புகள் உள்ளதாகவும், அதற்காக ஆஸ்திரேலிய முதலீட்டாளர்கள் அழைக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, மேலதிக செயலாளர் சமிந்த பத்திராஜா, ஆஸ்திரேலிய தூதரகத்தின் முதன்மை செயலாளர் ஷரினி மெக்வென் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# போலி வாக்குறுதி வழங்கி அரசால் தொடர்ந்தும் முன் செல்லமுடியாது!

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 04

மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கி நாட்டை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என ஐக்கிய மக்கள் குடியரசு கட்சியின் தலைவர் பாட்டலி சம்பிக ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரியை குறைப்பதாகவும் பொருட்களின் விலைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாகவும் அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தது. எனினும் அவை சோடிக்கப்பட்ட, மக்களை ஏமாற்றுவதற்காக கூறப்பட்ட வெறும் வார்த்தைகளாகும்.

எரிபொருளுக்கான வரியை முற்றாக குறைத்து அதன் நன்மைகளை மக்களுக்கு வழங்கப் போவதாக கூறினார்கள். ஆயினும் எரிபொருள் விலையில் மாற்றம் இல்லை.

காய்ந்த மிளகாய் ஒரு கிலோகிராம் 516 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்கு 100 ரூபா வரி அறவிடப்படுகிறது. அவ்வாறாயின் 616 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும். ஆயினும் சதொசவில் அதன் விலை 845 ரூவாவாகும்.

நெத்தலி ஒரு கிலோகிராம் 521 ரூவாவுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. நூறு ரூபா வரியுடன் 621 ரூபாவுக்கு விற்பனை செய்யலாம். ஆனால் சதொசவில் 960 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பருப்பு, சீனி, பெரிய வெங்காயம், கிழங்கு ஆகியனவும் அவ்வாறு கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலைகளை அரசாங்கத்தால் ஏன் குறைக்க முடியவில்லை-என்றார். (அ)

# தொழில் பாதுகாப்பை உறுதி செய்ய அமைச்சினால் வாட்ஸ் அப் இலக்கம்!

கொழும்பு, ஜன. 04

தொழில் அமைச்சினால் புதிய வாட்ஸ் அப் இலக்கமொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்மைய 0707227877 என்ற தொழில் அமைச்சின் வாட்ஸ் அப் இலக்கத்தின் ஊடாக தொடர்பை ஏற்படுத்தி கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.

அரசாங்க தகவல் திணைக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உழைக்கும் வர்க்கத்தினரின் தொழில்சார் உரிமையை பாதுகாத்தல் மற்றும் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கிலும் பலமான தொழில் அணியை உருவாக்கும் நோக்கிலுமே இந்த வாட்ஸ் அப் இலக்கம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தின் ஊடாக பொதுமக்கள் எதிர்பார்க்கும் நிவாரணம் மற்றும் தலையீட்டை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஏதுவான வாய்ப்பாக இந்த விடயம் அமையப்பெறும்.

தனியார் மற்றும் அரச ஊழியர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலுமே இந்த வாட்ஸ் அப் இலக்கம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (அ)

# மாத்தறை சிறைச்சாலையில் மற்றொரு கைதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 04

மாத்தறை சிறைச்சாலையில் அரச மரத்தின் கிளையொன்று முறிந்து விழுந்ததில் காயமடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றொரு கைதி உயிரிழந்துள்ளார். இதனையடுத்து குறித்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் 12 கைதிகள் காயமடைந்து மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சம்பவத்தன்று ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்தவர்களில் 7 பேர் மீண்டும் சிறைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதுடன், மூன்று பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதா தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் மாத இறுதியில் உள்ளூராட்சி தேர்தல்

**உறுதிப்படுத்தியது அரசு**

கொழும்பு, ஜன. 04

**எதிர்வரும் மார்ச் மாதம் இறுதியில் உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் நடைபெறவுள்ளதை ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் நிஹால் அபேசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.**



இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு-பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தற்போதைய சூழ்நிலையில் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளனர். உள்ளூராட்சிசபை மற்றும் மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை.

எனவே, விரைவில் தேர்தலை நடத்தி உள்ளூராட்சிசபைகளுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்குரிய வாய்ப்பை மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அந்தவகையில் மார்ச் இறுதியில் தேர்தல் நடத்தப்பட்டு, ஏப்ரல் மாதத்துக்குள் உள்ளூாராட்சி சபைகளை நிறுவுவதற்கும் உத்தேசித்துள்ளோம்-என்றார். (அ)

# சிறிலங்கா சுதந்திரக்கட்சி கதிரை சின்னத்தில் போட்டி

கொழும்பு, ஜன. 04

உள்ளூாராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் உட்பட எதிர்வரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி 'கதிரை' சின்னத்தில் போட்டியிடும் என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

2025 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கும் என்றும் சுதந்திரக் கட்சியுடன் கைகோர்க்குமாறும் துமிந்த திஸாநாயக்க எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இதேவேளை, சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பல்வேறு முரண்பாடுகளை சுமுகமான முறையில் தீர்த்து கட்சியை பலப்படுத்தும் வகையில் புதிய பயணத்தை புத்தாண்டில் ஆரம்பிக்கவுள்ளதாக கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியை வலுப்படுத்த விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க திட்ட மிட்டுள்ளதாகவும், பல்வேறு காரணங்களால் அரசியலில் இருந்து விலகிய அல்லது வேறு கட்சிகளில் இணைந்துள்ள அனைத்து சுதந்திரக் கட்சி யினரையும் இந்த முயற்சி யில் கட்சியுடன் கைகோர்க்கு மாறு அழைப்பு விடுப்பதாக வும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

# மேலும் ஒரு வினாத்தாள் கசிவ் உடனடி விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 04

வடமத்திய மாகாணத்தில் தரம் 6 மூன்றாம் தவணை பரீட்சையின் புவியியல் வினாத்தாள் கசிவு தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் சிறிமேவன் தர்மசேனவின் ஆலோசனையின் பேரில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது குறித்த வினாத்தாள் இரத்து செய்யப்பட்டு புதிய வினாத்தாள் தயாரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, சமூக வலைத்தளங்கள் ஊடாக வினாத்தளை வெளியிட்ட ஆசிரியர் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் மேலும் கூறினார். (அ)

# பட்டாசு விற்பனையில் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 04

கடந்த நத்தார் மற்றும் புத்தாண்டு காலத்தில் பட்டாசு விற்பனை 50 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்ணான்டோ தெரிவித்தார்.

மற்ற ஆண்டுகளில் நத்தார் மற்றும் புத்தாண்டு நாட்களில் பட்டாசு உற்பத்தி அதிகளவில் இடம்பெற்றதாகவும் அவர் கூறினார்.

எனினும், இந்த ஆண்டு பண்டிகைக் காலத்தில் பட்டாசு விற்பனை சரிந்ததால், உற்பத்திச் செலவை ஈடுகட்ட, பட்டாசுக்களை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்ய, உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தலைவர் சுட்டிக் காட்டினார்.கடந்த தேர்தல் காலத்தில் இருந்து பட்டாசு உற்பத்தியா ளர்கள் தமது பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருவதாக தினேஷ் பெர்னாண்டோ வெளிப்படுத்தினார். (அ)

# உயர்கல்வியைப் பெறும் பிள்ளைகளின் பாடசாலை விலகலை ஆராயவேண்டும்

**பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவுறுத்து**



கொழும்பு, ஜன. 04

உயர் கல்வியைப் பெறும் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவேண்டுமெனவும், எந்தவொரு காரணங்களுக்காகவும் பிள்ளைகளுக்கான கல்வி சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவது நிறுத்தப்படவேண்டுமெனவும் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

மஹரகம தேசிய கல்வி நிறுவனத்திற்கு நேற்று முன் தினம் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டபோதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்காலத்தில் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் பிள்ளைகள் தொடர்ச்சியாக இருப்பது மிகவும் குறைவாகவே உள்ளது. விசேடமாக ஆண் பிள்ளைகள் கல்வி செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்வது அதிகரித்துள்ளது. எந்தவொரு சமூக, பொருளாதார காரணங்களை அடிப்படையாக கொண்டும் பிள்ளைகளுக்கான கல்விச் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. குழந்தை பருவ வளர்ச்சியிலிருந்து 13 வருடகால பாடசாலை கல்வி உட்பட உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அனைத்து பிள்ளைகளுக்கும் பகிரங்கமாக காணப்பட வேண்டும். தனிநபர் மற்றும் சமூக பரிணாமத்தை ஏற்படுத்துவதை கல்வியின் பிரதான இலக்காகக்கொள்வது மிக முக்கியமாகும்.

மக்கள் கோரிய சமூக பரிணாமத்தை முன்னெடுப்பதற்கென பரிணாமமடைந்த கல்வி மாற்றத்தை மேற்கொள்வதன் ஊடாக இந்த நாட்டின் பிள்ளைகளுக்கு புதிய உலகில் கால் பதிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது அரசு செயற்படுகிறது.

சமூகத்திற்கு பொறுப்புக்கூறும் பிரஜையை உருவாக்குவதற்கென கல்விக்காக ஒதுக்கப்படும் ஒவ்வொரு மூலதனத்தை யும் நாட்டின் எதிர்கால முதலீ டாகவே நாம் பார்க்கின்றோம்.

நீண்டகால பிரதிபலன்களைக் கொண்டுள்ள இந்த உணர்வு பூர்வமான வேலைத் திட்டங்கள் குறித்து தேசிய கல்வி நிறுவ னத்திற்கு விசேட பொறுப்புக்கள் காணப்படுகின்றன-என்றார். (அ)

# மீனவக் குழுவினால் கண்டுபிடிக்கப்பட்ட ஆளில்லாத விமானத்தால் பாதிப்பில்லை!

கொழும்பு, ஜன. 04

திருகோணமலையை அண்மித்த கடலில் கண்டெடுக்கப்பட்ட இந்திய நிறுவனத்துக்குச் சொந்தமான ஆளில்லாத விமானம் இலங்கைக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இறுதி அறிக்கை விமானப்படை தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில், இந்த ஆளில்லாத விமானத்தால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்ட என்பதும் இந்திய நிறுவனத்துக்குச் சொந்தமானது என்பதும் தெரியவந்துள்ளது.



மீனவர் குழுவினால் கண்டுபிடிக்கப்பட்ட விமானம் ஏறக்குறைய இரண்டு வாரங்களாக கடலில் இருந்ததாகவும், அதனை மீண்டும் தொடர்புடைய நிறுவனத்திடம் ஒப்படைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்நாட்டு தேங்காய் எண்ணெய்க்கு வரி!

**அரசின் மீது கடும் விமர்சனம்**

கொழும்பு, ஜன. 04

உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு 18 வீத வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கு இதே அளவு வரி அறவீடு செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அழைப்பாளர் புத்திக்க சில்வா இந்த விவகாரம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில், இந்த நடவடிக்கையால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகுவதாக கூறினார்.

கடந்த ஆண்டு, நாட்டில் சுமார் 1 லட்சம் மில்லியன் கிலோ தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், இது விவசாயிகளின் பொருளாதாரத்தை அதிகரிக்கக் காரணமாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் உரிய முறையில் வரியளிக்கப்படாததால், இது அரசு வருமானத்தில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதோடு, முன்னதாக அனைத்து அரசியல் கட்சிகளும் உள்நாட்டு கைத்தொழில்களை பாதுகாக்கும் உறுதிமொழி அளித்திருந்த போதிலும், ஆட்சிக்கு வந்த பிறகு அந்த உறுதிமொழிகள் செயல்படுத்தப்படாமல் பேச்சுக்களாகவே மாறியுள்ளதாக அவர் குற்றம்சாட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்கைதிகளும் மனிதர்களே சங்கிலியால் பிணைத்து வராதீர்!

## கொழும்பு மேலதிக நீதவான் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 04

**சிறைச்சாலையில் உள்ளவர்களும் மனிதர்கள் என்பதால் அவர்களை மிருகங்களைப் போன்று சங்கிலியால் பிணைத்து திறந்த நீதிமன்றத்துக்கு கொண்டு வரவேண்டாம் என கொழும்பு மேலதிக நீதவான் பசான் அமரசேன நேற்று முன் தினம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட சந்தேகநபர்கள் குழுவுக்கு சங்கிலிகள் போடப்பட்டதை அவதானித்த நீதவான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"சந்தேக நபர்களை விலங்குகளைப் போல சங்கிலியால் பிணைத்து நீதிமன்றத்துக்கு கொண்டு வராதீர்கள். எனக்கு அது பிடிக்கவில்லை. அவர்களும் மனிதர்கள், அவர்களை மனிதர்களாகவே நடத்துங்கள்" என்று திறந்த நீதிமன்றத்தில் நீதவான் கூறினார்.

அவர்களை முறையான நடைமுறைகளின்படி நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதவான் மேலும் அறிவுறுத்தினார். (அ)

# துப்பாக்கியுடன் இளைஞர் கைது!

கொழும்பு, ஜன. 04

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

32 வயதுடைய இலக்கம் 52 தலங்கமுவ சொரபொர ஜனபதய மஹியங்கனை பகுதியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதிக்கு சென்று சுற்றி வளைத்து தேடுதலை மேற்கொண்ட போதே உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எட்கா உடன்படிக்கை குறித்து அரசு வெளிப்படுத்தவேண்டும்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஜன. 04

எட்கா உடன்படிக்கை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என பொதுஜன பெரமுனவின் களுத்துறை தொகுதி அமைப்பாளர் யோஹான் வடுகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புத்தாண்டில் கிளீன் சிறிலங்கா எனப்படும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது . 1968 ஆம் ஆண்டு சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூ ஆரம்பித்த வேலைத்திட்டத்திற்கு சமமான வேலைத்திட்டத்தையே அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

ஆனால் எம்முடைய ஜனாதிபதி லீகுவான் யூவை போன்று செயற்படக்கூடியவரா அல்லது அனைத்தும் வாய்வார்த்தைகள் மாத்திரமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 225 பேரும் வேண்டாம் என கூறி கிளீன் செய்தனர். ஆகவே முதலில் கட்சிக் குள் நிலவும் சிக்கல் நிலைகளை தீர்த்துவிட்டு நாட்டை சுத்தப் படுத்த நடவடிக்கை எடுக்கு மாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

அதன் காரணமாக தற்போது ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதில்லை.

இந்தியாவிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி எக்கா உடன்படிக்கை தொடர்பில் தீர்மானங்களை எடுத்துள்ளார்.

அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட யுவதி ஓமானில் உயிர்மாய்த்தார்!

கொழும்பு, ஜன. 04

அம்பாந்தோட்டையைச் சேர்ந்த இரண்டு இளம்பெண்கள் ஓமன் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அறையில் அடைத்து வைக்கப்பட்டு வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிரை மாய்த்துள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், டுபாயில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி இந்த இரண்டு யுவதிகளையும் ஓமன் நாட்டுக்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

டுபாயில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்டோர் தமது இரண்டு பிள்ளைகளையும் ஏமாற்றி இலங்கையிலிருந்து ஓமான் நாட்டுக்கு அனுப்பியதாக உயிரிழந்த யுவதியின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

குறித்த இரண்டு இளம் பெண்களும் இலங்கையில் உள்ள தமது பெற்றோரிடம் இதனைத் தெரிவித்து தம்மை இதிலிருந்து மீட்குமாறு கேட்டுள்ளனர். இதன்படி இரண்டு பிள்ளைகளின் பெற்றோர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தபோதிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் உரிய முறைப்பாட்டை ஏற்க மறுத்துள்ளதுடன் இரண்டு மகள்களையும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு எட்டு லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பின்னர், இந்த சம்பவம் தொடர்பாக வெளியுறவு அமைச்சிடம் முறைப்பாடு அளித்துள்ளனர். இந்த முறைப்பாடு தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்டோர் அறிந்து கொண்டுள்ளனர். சம்பந்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் குறித்த யுவதிகளின் வீட்டுக்கு சென்று, வெளிவிவகார அமைச்சில் முறைப்பாடு செய்தது ஏன் என அச்சுறுத்தியதுடன், குறித்த யுவதிகள் இருவரும் ஓமானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து வேறு இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் பணி புரிபவர் எனவும், அவர் மற்றுமொரு குழுவுடன் இணைந்துடுபாய், ஓமான், பஹ்ரைன் போன்ற நாடுகளுக்கு மனிதக் கடத்தில் ஈடுபடுபவர் என்றும் பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன(அ)

# கெஹலியவின் வங்கிக் கணக்குகள் மேலும் மூன்று மாதங்கள் முடக்கம்!

கொழும்பு, ஜன. 04

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெலவின் மனைவி, மகள்கள் மற்றும் உறவினர்களின் 97 மில்லியன் ரூபா பெறுமதியான 97 மில்லியன் ரூபா பெறுமதியான வங்கி நிலையான வைப்புத் தொகை மற்றும் ஆயுள் காப்புறுதிக் கணக்குகளை தடை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம், அந்த ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணைக்கு முன்னர் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவு நேற்றுடன் முடிவடையவிருந்த நிலையில், அதனை மேலும் நீடிக்குமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விடுத்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்றம், குறித்த உத்தரவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை நீடிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (அ)

# மில்லனிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கைது!

கொழும்பு, ஜன. 04

மில்லனிய பிரதேச சபையின் பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் ரவீந்திர நம்முனியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டஹச்சி குறித்து சமூக ஊடகங்களில் அவதூறான கருத்துக்களைப் பகிர்ந்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

படகோடாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் நேற்று காலை கைது செய்யப்பட்டார். (அ)

# கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் கடந்த வாரம் 298 பேருக்கு டெங்கு!

கொழும்பு, ஜன. 04

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் கடந்த வாரத்தில் 298 பேர் டெங்கு நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக, சுகாதார அமைச்சின் டெங்கு நோய் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் அதிகளவிலானோர் டெங்கு நோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதிலும் கடந்த வாரத்தில் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 298 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அந்த வகையில் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட் பட்ட பகுதியில் மாத்திரம் 123 பேர் டெங்நோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே பொது மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச் சின் டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# மின்சார சபை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை!

கொழும்பு, ஜன. 04

பல்வேறு அரச நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கும் அந்தக் கொடுப்பனவை விரைவில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய ஊழியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய தேசிய ஊழியர் சங்கத்தின் இலங்கை மின்சார சபை கிளை வலுசக்தி அமைச்சர் புண்ய ஸ்ரீ ஜயக்கொடிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இருப்பினும், இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை விடுவிக்க கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

## திருகோணமலை பிரதேச செயலகம் முன்பு பதற்றம்

திருகோணமலை, ஜன.04

**தமது காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனக் கோரி பல பதாகைகளை தாங்கியவாறு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், திருகோணமலை பிரதேச செயலகம் முன்பு பதற்றம் ஏற்பட்டது.**



திருகோணமலை முத்துநகர் பிரிவிலுள்ள உப்புவெளி கமநல அபிவிருத்தி பிரிவுக்குட்பட்ட சுமார் 1600 ஏக்கர் வயல் காணி திடீரென சோலார் - சூரிய மின்சக்தி உற்பத்தி நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்டதை கண்டித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் நேற்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 1200 விவசாயிகள் குறித்த விவசாய நிலங்களை பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதற்குள் 5 நீர்ப்பாசன குளங்களும் அடங்குகின்றன.

கடந்த வருடம் துறைமுக அதிகார சபையினர் சில பகுதிகளை தங்கள் பிரதேசம் என்று அடையாளப் படுத்தினர். அதேவேளை, தனியார் காணிகளும் இங்குள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினமும் திடீரென்று துறைமுக அதிகார சபையினர் அந்த நிலங்களை சூரியசக்தி மின் உற்பத்தி நிறுவனத்துக்கு விடுவிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல் கிடைத்திருக்கின்றது.

இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கியுள்ளார்.இந்த நிலையிலேயே நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலை பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# மார்பக புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு



திருக்கோவில், ஜன. 04

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 40 கர்ப்பவதிகளுக்கு மார்பகப் புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது .கல்முனை றோட்டரிக் கழகத் தலைவர் என். ரதீசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற கர்ப்பவதிகளுக்கு தலா2000 ரூபாய் பெறுமதியான சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மருத்துவர் பி. மோகனகாந்தன், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சிரேஷ்ட தாதியர் திருமதி எஸ். சிவமலர் ஆகியோர் வளவாளர்களாக பங்கேற்றனர். றோட்டரிக் கழகத்தின் செயலாளர் எம். சிவபாதசுந்தர மும் நிகழ்வில் கலந்துகொண்டார். (எ)

# திருவெம்பாவை ஊர்வலம் இன்று அதிகாலை ஆரம்பம்

காரைதீவு, ஜன.04

வருடா வருடம் இடம் பெற்று வரும் இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவை ஊர்வலமானது இம்முறையும் சிறப்பான முறையில் இன்று சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது.

சிவனை நினைந்து வழிபடும் இவ்விரதம் இன்று 4 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் திருவெம்பாவை ஊர்வல நிகழ்வுகள், ஆலய பூஜைகள் இடம்பெறவுள்ளன.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் வருடா வருடம் நடத்தி வரும் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலமானது இன்று அதிகாலை 4 மணியளவில் சிறீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்து நாட்கள் அதிகாலை ஊர்வலம் மற்றும் ஆலய சிறப்பு பூஜை வழிபாட்டுடன் நடைபெறும்.

13ஆம் திகதி திங்கட்கிழமை திருவாதிரை அதாவது ஆருத்ரா தரிசனத்துடன் இவ்விரதம் நிறைவடையும். (எ)

# செய்தியாளர்மீது தாக்குதல் பொலிஸாரால் 6 பேர் கைது

## சட்டவிரோத மணல் அகழ்வு நிறுத்தப்படுமா?

சம்மாந்துறை, ஜன.04

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளரை தாக்கிய 6 சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நைனாகாடு பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளரை தாக்கி ஊடக உபகரணங்கள் பறிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விவசாயிகளிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிக்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர் அ. உபேந்திர(வயது - 50) என்பவர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளரின் புகைப்படக்கருவி தொலைபேசி, ட்ரோன் கமரா ஆகியவை



சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாக இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கே. சதீஸ்கர் தலைமையிலான குழுவினர், சந்தேக நபர்களினால் அபகரித்து செல்லப்பட்ட ட்ரோன், புகைப்படக்கருவி மற்றும் தொலைபேசிகள் உள்ளிட்டவற்றை மீட்டனர்.

அத்துடன் ஆறு சந்தேக நபர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள், மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனம் என்பனவற்றையும் பறிமுதல் செய்தனர். இதுதவிர தாக்குதலுக்குள்ளான குறித்த ஊடகவியலாளர் அம்பாறை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் நேற்று கைதாகினர்

## பொலிஸார் தீவிர விசாரணை

சம்மாந்துறை, ஜன.04

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இருவரிடம் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் நடமாடிய இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது நீண்ட காலமாக ஐஸ் போதைப்பொருட்களை பொதி செய்து வியாபாரம் செய்து வந்த இரு சந்தேக நபர்களே கைதாகினர்.

கைதான 27 மற்றும் 40 வயதுடைய இரு சந்தேக நபர்களும் கருவாட்டுக்கல், உடங்கா பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வசமிருந்து 4200 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. (எ)

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

சம்மாந்துறை, ஜன.04

ஹெரோயின் போதைப் பொருளுடன் நடமாடிய இளைஞனை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டதுடன் 1900 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பனவற்றை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற செயல்திட்டங்கள் குறித்து ஆராய்வு

திருகோணமலை, ஜன.04

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் செயல் திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷ்டம். ஏ.எம். பைஷல், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, ஆளுநரின் செயலாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றின் ஆணையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், உள்ளூராட்சி மன்றங்களின் வருவாய் பற்றாக்குறை, சிறு திட்டங்கள் மூலம் புதிய வருமானம் ஈட்டுதல், கழிவு முகாமைத்துவம், வாகன பராமரிப்பு, நிலம் தொடர்பான பிரச்னைகள், நிலையான வைப்புச் சிக்கல்கள், சோலார் பொருத்துதல் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஆளுநரால் எடுத்துரைக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் வான்வழித் தாக்குதல் 3 குழந்தைகள் உட்பட 10 பேர் பலி

காஸா, ஜன.04

**காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.**

இதில், காஸா பொலிஸ் துறையின் பொது இயக்குநரான மேஜர் ஜெனரல் மஹ்மூத் சாலா மற்றும் அவரது துணைத் தளபதி பிரிக் ஜெனரல் ஹோசம் ஷாவான் ஆகியோர் அடங்குவர் என்று பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு கடத்திச் சென்றனர்.

இந்தப் போரில் இதுவரை 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேபோன்று, மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்த நிலையில், காஸா பகுதியில் நேற்று இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 3 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் இராணுவத்திடமிருந்து எந்தத் தகவலும் இதுவரை வெளியாகவில்லை. (எ)

# விடுதியில் நடந்த மோதலில் 12 பேர் சுட்டுப் படுகொலை!

மான்டேனேக்ரோ, ஜன.04

தென்கிழக்கு ஐரோப்பிய நாடான மான்டேனேக்ரோவின் செடின்ஜே நகரில் உள்ள மது பான விடுதியில் நடந்த வாய்த் தகராறு மோதலாக மாறியதில் 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்தியவரும் தற்கொலை செய்துகொண்டார்.

மார்டினோவிக் என்பவர் தனது நண்பர்களுடன் மது அருந்த வந்தார். அவர் நாள் முழுவதும் மது அருந்திக் கொண்டிருந்தார். இதனால் விடுதி உரிமையாளருக்கும் மார்டினோவிக்கும் வாய்த்த கராறு ஏற்பட்டதாக தெரிகிறது. இதையடுத்து மாலையில் வீட்டுக்கு சென்ற மார்டினோவிக் தனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மீண்டும் மது விடுதிக்கு வந்தார். விடுதி உரிமையாளர் உட்பட 4 பேரை அவர் சுட்டுக் கொன்றார்.

மது பான விடுதியைவிட்டு வெளி யேறிய அவர் மேலும், 3 இடங் களில் துப்பாக்கிச் சூடு நடத்தி னார்.

இதில் 12 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயம் அடைந்தனர். (எ)

# சுற்றுலா பஸ் விபத்து தாய்லாந்தில் ஐவர் பலி

பாங்கொக், ஜன.04

தாய்லாந்தில் சுற்றுலா பயணிகள் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

தெற்கு தாய்லாந்தில் உள்ள யாலா மாகாணத்துக்கு சுற்றுலா செல்வதற்காக பாங்கொக் அருகே உள்ள சமுத் சகோன் மாகாணத்தில் வசிப்பவர்கள் பஸ்சில் சென்று கொண்டிருந்தனர்.

அந்த சுற்றுலா பஸ் சூரத் தானி மாகா ணத்தில் உள்ள வீதியின் வளைவில் திரும்பும் போது சறுக்கி மரத்தில் மோதி கவிழ்ந்து.

இந்த கோர விபத்தில் ஐவர் உயிரிழந்தனர் மற்றும் 30 பேர் காயமடைந்தனர். (எ)

# பிரமாண்ட பேரணி நடத்த டொனால்ட் ட்ரம்ப் திட்டம்

வாஷிங்டன், ஜன.04

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கும் முன்னர் பிரமாண்ட பேரணி நடத்த டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஆண்டு நடைபெற்றது. இதில், டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றார். அவர் அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ளார். பதவியேற்பு விழா எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்க முன்னர் பிரமாண்ட பேரணி நடத்த ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். இதன்படி எதிர்வரும் 19ஆம் திகதி வாஷிங்டன் மாகாணத்தில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.




இந்தப் பேரணியில் சுமார் 20 ஆயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர்.

பேரணி, பதவியேற்பு நிகழ்ச்சியையொட்டி வாஷிங் டன் மாகாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

# ஹமாஸ் பாதுகாப்பு பிரிவு தலைவர் படுகொலை!

## இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

ஜெருசலேம், ஜன.04

காஸாவில் இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில், ஹமாஸ் அமைப்பின் பாதுகாப்புப் பிரிவு தலைவர் படுகொலை செய்யப்பட்டார்.

தெற்கு காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பின் பாதுகாப்பு பிரிவின் தலைவராக செயல்பட்டு வந்தவர் ஹஸ்ஸம் ஷாவான். இந்த நிலையில், ஆளில்லா விமானத் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டு விட்டார் என இஸ்ரேல் இராணுவம் நேற்று அறிவித்துள்ளது.

கான் யூனிஸ் பகுதியில் மனிதாபிமான மண்டலத்தில் இருந்தபோது, ஷாவான் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என தெரிவித்துள்ளது. காஸாவில் இருந்து புலம்பெயர்ந்து சென்றுள்ள பலஸ்தீனியர்கள் இந்த பகுதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த நிலையில், தெற்கு காஸா முனை பகுதியிலிருந்து இஸ்ரேல்மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும், இந்த ரொக்கெட் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# சின்மயி கிருஷ்ண தாஸுக்கு மீளவும் பிணை மறுக்கப்பட்டது

டாக்கா, ஜன.04

பங்களாதேஷில் தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்ட இஸ்கான் அமைப்பின் தலைவர் சின்மயி கிருஷ்ண தாஸுக்கு மீண்டும் பிணை மறுக்கப்பட்டது.

பங்களாதேஷில் ஏற்பட்ட மாணவர் கலவரத்துக்குப் பின்னர், பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா இந்தியா தப்பிச் சென்றார். இதன்பின்னர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பொறுப்பேற்றது. அதன் பின்னர் இந்துக்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே சின்மயி கிருஷ்ண தாஸ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (எ)

# தமிழக அமைச்சர் துரைமுருகனின் வீட்டில் அமுலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை

வேலூர், ஜன.04

தி. மு. க. பொதுச் செயலாளரும், தமிழக நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் வீட்டில் நேற்றுக்காலை 9 மணி முதல் அமுலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

சி. ஆர். பி. எப். படையினரின் பாதுகாப்புடன் 10இற்கும் மேற்பட்ட அமுலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில்



ஈடுபட்டு வருகின்றனர்.

அமைச்சர் துரைமுருகனுக்கு சொந்தமான கல்லூரியிலும் சோதனை நடைபெற்று வருகிறது.

அமைச்சர் துரைமுருகனும் அவரது மகனும் , தி. மு. க. எம். பி. கதிர் ஆனந்த்தும் காட்பாடியில் ஒரே வீட்டில் வசித்து வருகின்றனர். தற்போது, அந்த வீட்டில் அமுலாக்கத்துறை சோதனை நடைபெற்று வருகிறது. (எ)

# கோழைத்தனமானது

## தீவிரவாதத் தாக்குதலுக்கு பிரதமர் மோடி கண்டனம்

புதுடில்லி, ஜன. 04

அமெரிக்காவின் நியூ ஒர்லியன்ஸ் நகரில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல் கோழைத்தனமானது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நியூ ஒர்லியன்ஸில் நிகழ்ந்த கோழைத்தனமான தீவிரவாதத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். எங்கள் எண்ணங்களும், பிரார்த்தனைகளும் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினருடன் உள்ளது. இந்தத் துயரத்திலிருந்து அவர்கள் மீளும்போது அவர்களுக்கு வலிமையும் ஆறுதலும் கிடைக்கட்டும்"- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# சிலியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

சாண்டியாகோ, ஜன.04

சிலி நாட்டின் பொலிவியா எல்லைப் பகுதியில் நேற்றுக் காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவானதாக தேசிய நிலஅதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

75 கி. மீ. ஆழம் கொண்ட இந்த நிலநடுக்கம், 21.67 டிகிரி தெற்கு அட்சரேகையிலும், 68.93 டிகிரி மேற்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத் தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக உடனடி தகவல்எதுவும்வெளியாகவில்லை. (எ)

# வணிக வளாகம்மீது விமானம் மோதியது

வாஷிங்டன், ஜன.04

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் சிறிய ரக விமானம் வானில் பறந்து கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 20 பேர் பயணித்தனர்.

புலர்டன் நகர் வான்பரப்பில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் விபத்துக்குள்ளானது.


அப்பகுதியில் உள்ள வணிக வளாகத்தின் மேற்கூரை மீது மோதி விமானம் தீப்பற்றி எரிந்தது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 2 பேர் உயிரிழந்தனர். மேலும், 18 பேர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும்185 ஓட்டங்களுக்கு சுருண்டது இந்திய அணி!

## 5 ஆவது டெஸ்ட் போட்டியிலும் ஆஸி ஆதிக்கம்



சிட்னி, ஜன.04

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் வெறும் 185 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு "பார்டர் - கவாஸ்கர்" கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நேற்றுத் தொடங்கியது. ரோஹித் சர்மா அணியிலிருந்து விலகிய நிலையில் பும்ரா தலைவராக செயல்படுகிறார்.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற பும்ரா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா கடந்த போட்டிகளை போலவே இதிலும் துடுப்பாட்டத்தில் தடுமாறியது. கே. எல். ராகுல் 4 ஒட்டங்களிலும், ஜெய்ஸ்வால் 10 ஒட்டங்களிலும் விரைவில் ஆட்டமிழந்து வெளியேறினர். இதன்பின் ஜோடி சேர்ந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய கில் - கோலி இணை 40 ஒட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் பிரிந்தது. கில் 20 ஒட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய ரிஷப் பண்ட் இந்த முறை அணியின் நலன் கருதி பொறுமையாக விளையாடினார். விராட் கோலி 17 ஒட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பொறுமையாக விளையாடிய ரிஷப் பண்ட் 40 ஒட்டங்களிலும் அவரை தொடர்ந்து ஜடேஜா 26 ஒட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதி கட்டத்தில் பும்ரா 22 ஒட்டங்கள் அடித்து அணி கௌரவமான நிலையை எட்ட உதவினார். முடிவில் 72. 2 ஓவர்கள் தாக்குப் பிடித்த இந்தியா முதல் இன்னிங்ஸில் 185 ஒட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்காட் போலன்ட் 4 விக்கெட்களும், ஸ்டார்க் 3 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழந்து 9 ஒட்டங்கள் எடுத்தது. கான்ஸ்டாஸ் 7 ஒட்டங்களுடன் களத்தில் உள்ளார். கவாஜா 2 ஒட்டங்களில் ஆட்டமிழந்தார். பும்ரா ஒரு விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

இன்று 2ஆவது நாள் ஆட்டம் நடைபெறுகிறது.(எ)

# கேல் ரத்னா விருது என்னை ஊக்குவிக்கும்

## செஸ் சம்பியன் குகேஷ் தெரிவிப்பு




சென்னை, ஜன.04

கேல் ரத்னா விருது தன்னை ஊக்குவிக்கும் என்று உலக செஸ் சம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர் குகேஷ் தெரிவித்தார்.

விளையாட்டு வீரர்களுக்கான இந்திய மத்திய அரசின் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உலக செஸ் சம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர் குகேஷுக்கும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

"இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் எனக்கும் எனது சாதனைகளை அங்கீகரிக்கவும் மதிப்புமிக்க மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதை அறிவித்ததை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இந்திய அரசு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். இந்த விருது 2025ஆம் ஆண்டில் இன்னும் கடினமாக உழைக்க மற்றும் நாட்டிற்காக அதிக விருதுகளை அடைய என்னை ஊக்குவிக்கும்"- என குகேஷ் தெரிவித்தார். (எ)

# இந்திய அணியின் தலைவராக ஹர்திக்?

## ரோஹித்தை நீக்க பி. சி. சி. ஐ. முடிவு

மும்பை, ஜன.04

இந்திய அணிக்கு புதிய தலைவராக ஹர்திக் பாண்டியாவை நியமிக்க பி.சி.சி.ஐ. முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர் பாகிஸ்தானில் பெப்ரவரி 19 முதல் மார்ச் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் டுபாயில் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணிக்கு புதிய தலைவராக ஹர்திக் பாண்டியாவை நியமிக்க பி.சி.சி.ஐ. முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணியின் தலைவராக உள்ள ரோஹித் சர்மாவின் செயல்பாடுகள் பி. சி. சி. ஐக்கு திருப்திகரமாக இல்லை.இதனால் தற்போது நடைபெற்று வரும் பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரின் கடைசி போட்டியிலி ருந்து அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டு, பும்ரா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே ரி - 20 உலகக் கிண் ணத்தை வென்றவுடன் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தார். அதனைத் தொடர்ந்து சூர்யகுமார் யாதவ் ரி - 20 அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், தற்போது ஒருநாள் கிரிக்கெட் அணி தலைவர் பதவியிலிருந்தும் அவரை நீக்கி விட்டு புதிய தலைவராக ஹர்திக் பாண்டியாவை நியமிக்க பி.சி.சி.ஐ. முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியா கியுள்ளன. இருப்பினும் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை. (எ)

# 45 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் சிம்பாவேயும் தடுமாற்றம்

புலவாயோ, ஜன.04

ஆப்கானிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 157 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்த நிலையில் சிம்பாவே அணியும் 45 ஒட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகிறது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டி சமனிலையானது. இதனையடுத்து 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் புலவாயோவில் நேற்று முன்தினம் தொடங்கியது.

மழை காரணமாக சுமார் 4 மணி நேரம் தாமதமாக தொடங்கிய இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸை தொடங்கிய ஆப்கானிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சிம்பாவே பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சொற்ப ஒட்டங்களில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர்.

முதல் இன்னிங்ஸில் 44. 3 ஓவர்கள் தாக்குப்பிடித்த ஆப்கானிஸ்தான் 157 ஒட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக ரஷித் கான் 25 ஒட்டங்கள் அடித்தார். சிம்பாவே தரப்பில் சிக்கந்தர் ராசா மற்றும் நியூமன் நியாம்ஹுரி தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாவே முதல் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 6 ஒட்டங்கள் எடுத்தது. இந்த நிலையில் நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் சிம்பாவே அணி 45 ஒட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறியது. (எ)

# சர்வதேச ரி - 20 கிரிக்கெட்டில் பெரேரா மாபெரும் சாதனை!



வெலிங்டன், ஜன.04

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி ரி - 20 போட்டியில் இலங்கை அணி வீரர் குசல் பெரேரா 44 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். இது சாதனையாக பதிவாகியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி குசல் பெரேராவின் அபார சதத்தின் உதவியுடன் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 218 ஒட்டங்கள் குவித்தது. இதன் மூலம் 7 ஒட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இது இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றியாக அமைந்தது.

முன்னதாக குசல் பெரேரா இந்த போட்டியில் 44 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டியில் குறைந்த பந்துகளில் சதம் அடித்த இலங்கை வீரர் என்ற மாபெரும் வரலாற்று சாதனையை அவர் படைத்துள்ளார். இதற்கு முன்னர் டில்ஷான் 55 பந்துகளில் சதமடித்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள குசல் பெரேரா புதிய சாதனை படைத்துள்ளார். (எ)

# காலிறுதியில் சபலெங்கா

பிரிஸ்பேன், ஜன.04

பிரிஸ்பேன் ரென்னிஸ் தொடரில் உலகின் முன்னணி வீராங்கனை அரினா சபலெங்கா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நம்பர் 1 வீராங்கனையான அரினா சபலெங்கா, புதின்சேவாவுடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சபலெங்கா 7 - 6 மற்றும் 6 - 4 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செ.பிரணவநாதன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், யாழ்ப்பாண பதில் அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட மாகாண திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ-5)

## அமெரிக்காவுக்கான...

தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் அரசியல் நோக்கங்களுக்கான கடந்த காலத்தில் நியமிக்கப்பட்டிருந்த 16 தூதுவர்களை மீள அழைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மகிந்த சமரசிங்க, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியின் முக்கிய அரசியல் செயல்பாட்டாளராக கடந்த இரண்டு தசாப்தங்களாக செயல்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ் தேசிய...

வெளிப்படுத்தியிருந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதனை முன்னிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் மற்றும் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதன் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து எதிர்வரும் 7 ஆம் திகதி பாராளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறவிருக்கும் நிலையில், அன்றைய தினம் சிறிதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் மீண்டும் கலந்துரையாடவிருப்பதாகத் தெரிவித்தார்.

அதனூடாக தமிழ்த்தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்க ளுடன் அத்தீர்வுத்திட்ட வரைவு குறித்து ஆழமாக ஆராயவும், கலந்துரையாடவும் முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

## அநுரவின்...

பிரதான இரண்டு நாடுகளாக இந்தியாவும் சீனாவும் உள்ளன. இந்த இரண்டு நாடுகளையும் அமெரிக்க உட்பட மேற்குலகத்தையும் கையாள வேண்டிய நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உள்ளார்.

இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கு இரு தரப்பையும் சமரசப்படுத்தவும் வேண்டும் என்பதால் இந்தியாவை போன்றே சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்த அநுரகுமார திசாநாயக்க, விரும்புவதாகவும் இந்தப் பயணம் பல நன்மைகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கும் எனவும் அரச தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

என்றாலும், இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விவகாரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் இலங்கையும் சீனாவும் கலந்துரைந்துரையாடல்கள் மேற்கொள்கின்றனவா என்பது தொடர்பில் புதுடில்லி இந்த அரசாங்கம் அமைந்தது முதல் கழுகுப்பார்வை செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் தமது இந்திய பயணத்தின் போது, இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விவகாரம் குறித்தும் இலங்கை அவதானமாகதான் செயல்படும் எனக் கூறியிருந்தார். (அ)

## வவுனியாவில்...

இடம்பெற்றிருந்தது.

சம்பவத்தில் த.காந்தரூபன் வயது 49 என்ற குடும்பஸ்தரே பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## மன்னார்...

மின்சார திட்டம், மற்றும் கனியவள மண்ணகழ்வு போன்ற பிரச்னைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதன்போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த காற்றாலைத் திட்டம் குறித்து விளக்குவதற்கு அத்திட்டத்தின் முகாமையாளர் முயன்றபோது கிராம மட்ட பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து பாரிய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் போது காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் மக்கள் விரும்பாத ஒரு செயற்பாட்டை தொடர்ந்ததும் முன்னெடுக்க முடியாது.

எனவே இந்த திட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்த காற்றாலை திட்டம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என தெரிவித்தார்.

மேலும் இந்த நடவடிக்கை தொடருமாயின் மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள நேரிடும். எனவே அதை நிறுத்துவது சிறந்தது.

எதிர் வருகின்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குறித்த விடயங்கள் குறித்து மீள் பரிசீலனை செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் ஏற்பாட்டில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், துரைராசா ரவிகரன், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன் ஆகியோர் கலந்து கொண்டதோடு, சகல திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கிராம மட்ட பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் சிவில் சமூகத் தலைவர்கள், மதத் தலைவர் கலந்து கொண்டனர். (அ)

## அரசியல்...

பெற்று குறித்த போராட்டத்தை மேற்கொள்ளுமாறு தெரிவித்து அதைத் தடுத்து நிறுத்தினர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் தொடர்ச்சியாக வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்று நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்நிலையில், கிளிநொச்சியில் மட்டும் இவ்வாறு பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியமைக்கு ஏற்பாட்டாளர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத்து அடங்கிய மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை வைத்தியருக்கு ஆஸ்திரேலியாவில் சிறை!

கான்பரா, ஜன. 04

ஆஸ்திரேலியாவில் சிறுவர்களை பாலியல் ரீதி யாக துஷ்பிரயோகம் செய்தார் என இலங்கையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவருக்கு 10 ஆண்டுகள் மற்றும் 10 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

52 வயதான தோல் மருத்துவரான பிரதீப் திசா நாயக்க என்பவருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் மதத்தின் போர்வையில் தனது துஷ்பிரயோகத்தை தந்திரமாக முன்னெடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அவர் தன்னை ஒரு கடவுள் போன்ற நபராகக் காட்டிக் கொண்டு, தன்னை பின்தொடரும் பக்தர் ஒருவரின் மகள்களை துஷ்பிரயோகம் செய்ய தனது ஆதரவாளர்களின் நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

முன்னதாக அவருக்கு எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட போதிலும் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை போதுமானதாக இல்லை என்று கருதப்பட்டதால் மேல்முறையீட்டுக்கும் அதிகரித்த தண்டனைக்கும் வழிவகுத்ததாக கூறப்படுகின்றது.

புத்த மதம் மற்றும் கிறிஸ்தவ மதக் கூற்றுகளை இணைத்து அவர் தனது வழிபாட்டு முறைகளை நிறுவியதாக கூறப்படுகின்றது.

அடிப்படைச் சுகாதாரத்துக்கான அனுமதி கோருதல் மற்றும் ஒரே பாலின வாழ்க்கை ஏற்பாடுகளை அமுல்படுத்துதல் உள்ளிட்ட கடுமையான விதிகளை அவர் தனது ஆதரவாளர்கள் மீது விதித்தாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், அவர் இரண்டு சிறுமிகளை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை இடம்பெற்றதுடன், அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

தனது அநாகரீகமான செயல்களுக்கான பொறுப்பை ஒப்புக்கொண்ட அதே வேளையில், திசாநாயக்க தனது செயல்களை நியாயப்படுத்த முயன்றதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில்,"நான் இனி சமூகத்தில் இருப்பது சரியல்ல என்று நினைக்கிறேன். நான் என்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு மனம் திரும்ப விரும்புகிறேன்" என்று ஒரு உளவியலாளருடனான ஒரு நேர்காணலில் திசாநாயக்க கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆஸ்திரேலிய சுகாதார பயிற்சியாளர் ஒழுங்குமுறை நிறுவனத்திற்கு குற்றச்சாட்டுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவம் செய்வதற்கான அவரது உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.4

யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை (05.01.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

## அமெரிக்காவில்...

அமெரிக்காவில் உள்ள பசில் ராஜபக்ஷவின் சொத்துக்கள் குறித்து கடந்த காலத்தில் விமல் வீரவன்ஸ வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு நேற்று வெள்ளிக்கிழமை அவரிடம் வாக்குமூலமொன்றை பெற்றிருந்தது.

வாக்குமூலத்தை அளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

பஸில் ராஜபக்ஷவுக்கு அமெரிக்காவில் இருக்கும் சொத்துகள் தொடர்பில் நான் வெளியிட்டிருந்த கருத்துகள் குறித்து வாக்குமூலமொன்றை பெற வேண்டுமென குற்றப்புலனாய்வுப் பிரிவு அழைத்திருந்தது. என்னிடம் உள்ள தகவல்களை அவர்களிடம் வழங்கியுள்ளேன்.

அமெரிக்காவில் எந்தவொரு பணியும் புரியாத பஸில் ராஜபக்ஷவுக்கு எவ்வாறு அங்கு பெருமளவிலான சொத்துக்கள் இருக்க முடியும். அவரது மகன் மற்றும் உறவினர்கள் சிலரது பெயரிலும் சொத்துக்கள் உள்ளன.

இந்த அரசாங்கம் உண்மையான ஊழல், மோசடியாளர்கள் குறித்து விசாரணைகள் செய்வதாக எமக்கு தெரியவில்லை. தற்போது பஸில் ராஜ பக்ஷவின் சொத்துக்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுள்ளனர்.

அவர் இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்பதால் விசாரணைகளை துரிதமாக ஆரம்பிக்க முடியும். இந்த விடயத்தில் அரசாங்கம் உண்மையான விசாரணைகளை ஆரம்பித்தால் எம்மிடம் மேலதிக தகவல்கள் இருந்தால் அதனை வழங்க முடியும் - என்றார். (அ)

## வங்குரோத்து...

சுட்டிக்காட்டினார்.

தேசிய தொலைக்காட்சியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் தமது அரசாங்கத்தின் கலந்துரையாடல்கள் பத்து நாட்களில் நிறைவு செய்யப்பட்டதாகவும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யும் யோசனையில் அவ்வாறு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமது குழுவின் தலையீடு மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் குழு கூட ஆச்சரியமடைந்ததாக அமைச்சர் சுனில் கூறினார். (அ)

## ஜனாதிபதியின்...

பாராளுமன்றத்தில் சந்தித்து பேசினார். இச்சந்திப்பில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இதன்போது சீன தேசிய மக்கள் காங்கிரசின் நிலைக்குழுவின் தலைவர் (சீன பாராளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜி வாழ்த்துக் கடிதத்தை சீனத் தூது வர் புதிய சபாநாயகரிடம் கையளித் தார்.

சீனத் தூதுவர் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில், குறிப்பாக பரிமாற்றத் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் இரண்டு சட்டவாக்க நிறுவனங்களுக்கும் இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பொலனறுவையில் உள்ள சீன - இலங்கை நட்புறவு தேசிய சிறு நீரகவியல் சிறப்பு வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளராக தனது முன் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்ட சபாநாயகர் வைத்தியகலாநிதி ஜகத் விக்ரமரத்ன, இலங்கை மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் சீன அபிவி ருத்தித் திட்டங்கள் தொடர்பில் நன்றி தெரிவித்தார்.

இரு பாராளுமன்றங்களுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இலங்கை - சீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள் புதுப்பிப்பதற்கான ஆர்வத்தையும் சபாநாயகர் வெளிப்படுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புதிய அரசமைப்பு குறித்து சகல தரப்புடனும் பேசுங்கள்

## அரசை வலியுறுத்துகிறார் நாமல்

கொழும்பு, ஜன.04

**புதிய அரசியலமைப்போ அல்லது அரசியலமைப்பு திருத்தமோ எதுவாக இருந்தாலும் நாட்டில் பரந்துபட்ட ரீதியிலான பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் நடத்தப்படவேண்டும். சகல தரப்புகளுடனும் பேச்சு நடத்தியே இது தொடர்பில் இறுதி முடிவை எடுக்கவேண்டும். அவ்வாறான செயல்முறையை பின்பற்றினால் அந்த செயல்பாட்டுக்கு பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

மேலும் இந்திய எதிர்ப்பாளர்களாக இருந்து வந்த ஜே,வி.பி. இன்று இந்திய ஆதரவாளராக மாறி இருக்கின்றமை குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம் என்றும் நாமல் குறிப்பிட்டார்.

ஆனால் எட்கா போன்ற உடன்படிக்கைகள் தொடர்பாக தொடர்ந்து பரந்துபட்ட ரீதியான பேச்சுக்கள் அவசியம். அது இலங்கைக்கு நல்லது. இந்தியாவுக்கும் நல்லதாகவே அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்றம் தொடர்பான கருத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே நாமல் ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசியலமைப்பு தொடர்பாக பேச்சுக்கள் சகல தரப்புகளுடனும் பரந்துபட்ட ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும். சகல தரப்புடனும் பரந்துபட்ட ரீதியில் பேச்சுக்களை நடத்தியே புதிய அரசியலமைப்பு தொடர்பாக முடிவெடுக்க வேண்டும்.

புதிய அரசியலமைப்போ அல்லது அரசியலமைப்பு திருத்தமோ எதுவாக இருந்தாலும் சகல தரப்புடனும் பரந்துபட்ட ரீதியிலான விஸ்தீரணமான பேச்சுக்கள் அவசியமாக இருக்கின்றது. அதே நேரம் அரசாங்கம் வடக்கு, கிழக்கு, மலையக மற்றும் தென்னிலங்கை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அரசியலமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் வாக்குறு திகளை வழங்கி இருக்கிறது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

ஆனால் எம்மை பொறுத்தவரை வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை விட நாடு எப்படி இருந்ததோ அப்படியே கொண்டு செல்வதே அரசாங்கத்துக்கு சவாலாக மாறி இருக்கிறது.

அரசாங்கம் நாட்டை தற்போது இருந்தவாறு அப்படியே கொண்டு செல்கிறது. புதிய திட்டங்கள் எதையும் நாங்கள் காணவில்லை. எனவே வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை விடுத்து அரசாங்கம் நாட்டை கொண்டு செல்வதற்கே கஷ்டப்படுகின்றமையை நாங்கள் பார்க்கின்றோம்.

எப்படி இருப்பினும் புதிய அரசியலமைப்பு தொடர்பாக பேசப்படுகின்றபோது அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறை மாற்றம் குறித்தும் பேசப்படுகிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவது என்றால் நாட்டின் தேர்தல் முறைமையும் மாற்றப்பட வேண்டும். ஒன்றை செய்துவிட்டு இன்னொன்றைச் செய்யாமல் இருக்க முடியாது. இரண்டையும் ஒன்றாகவே செய்ய வேண்டும்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை நாங்கள் நல்ல சிறந்த முறையில் பார்க்கின்றோம். அது வரவேற்கத்தக்க விடயம். குறிப்பாக இந்திய எதிர்பாளராக இருந்தவர்கள் தற்போது இந்திய ஆதரவாளர்களாக செயல்படுகின்றமை எமக்கு மகிழ்ச்சியை தருகிறது. கூட்டு பிரகடனம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் பல்வேறு விடயங்கள் உள்ளன.

ஆனால் அந்த விடயங்கள் தொடர்பாக பரந்துபெற்ற ரீதியிலான பேச்சுவார்த்தைகள் அவசியம்.

எட்கா உடன்படிக்கை தொடர்பாக கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அது தொடர்பாக மேலும் பரந்தபட்ட ரீதியான பேச்சுக்கள் அவசியமாகின்றன. அவ்வாறான பேச்சுக்கள் இந்தியாவுக்கும் நல்லதாக அமையும். இலங்கைக்கும் நல்லதாக அமையும். எனவே எந்த ஒரு விடயமாக இருந்தாலும் பரந்துபட்ட ரீதியிலான பேச்சுக்களை நடத்தி பொது இணக்கப்பாட்டு அடிப்படையில் தீர்மானம் எடுப்பது சரியாக அமையும் - என்றார். (அ)

# மீண்டும் சீனாவில் பரவும் வைரஸ் அவதானம் செலுத்தும் இலங்கை!

கொழும்பு, ஜன. 04

சீனாவில் பரவி வருவதாக கூறப்படும் வைரஸ் தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாக இலங்கை தொற்றுநோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவல்களை இடம்பெறும் ஆய்வின் பின்னர் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கவுள்ளதாகவும் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கொவிட் -19 வைரஸ் பரவலுக்கு பிறகு சுமார் ஐந்து வருடங்களுக்குப் பிறகு, சீனாவில் பல வைரஸ்கள் பரவி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், சீனாவில் எச்.எம்.பி.வி. என்ற வைரஸால் சுவாச நோய் அங்கு வேகமாகப் பரவி வருவதோடு இது கொவிட்-19 அறிகுறிகளைப் போலவே இருக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த வைரஸானது 14 வயதுக்குட்பட்டவர்களை அதிகளவில் தாக்குவதாகக் கூறப்படுகிறது. இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு மற்றும் மூச்சுத்திணறல் ஆகியவை இந்த வைரஸின் அறிகுறிகளாகும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போது சீனாவில் உள்ள பல வைத்தியசாலைகள் இன்புளுவன்சா ஏ, மைக்கோபிளாஸ்மா நிமோனியா மற்றும் கோவிட் -19 நோயாளிகளால் நிரம்பியுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சி.ஐ.டியில் முன்னிலையான யோஷித!

கொழும்பு, ஜன. 04

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித்த ராஜபக்ஷ நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார்.

கதிர்காமம் பகுதியில் அமைந்துள்ள அரச காணி ஒன்றின் உரிமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்று காலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.



சுமார் 2 மணிநேரம் அவர் குற்றப் புலனாய்வு திணைக் களத்தில் வாக்குமூலம் வழங்கியதாக தெரிவிக்கப் பட்டது.(அ)

# அநுரகுமாரவின் அரசு நம்பிக்கை இழக்கிறது

## பொதுஜன பெரமுன கூறுகிறது

கொழும்பு, ஜன. 04

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், மக்கள் நம்பிக்கையை இழந்து வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சஞ்சீவ எதிரிமான்ன மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கும், செய்கின்ற செயலுக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இதனை மக்களும் தற்போது புரிந்துகொண்டுள்ளனர்.

தமது பாரம்பரியக் கட்சிகளையெல்லாம் விட்டுவிட்டுதான் இந்த அரசாங்கத்துக்கு வடக்கு, கிழக்கும், மலையகம், தெற்கு என அனைத்து பகுதி மக்களும் ஆதரவு வழங்கினார்கள். எனினும், தற்போது அரசாங்கம் மீதான மக்கள் நம்பிக்கை குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

2024 ஆம் ஆண்டு தேர்தல் வருடாகும். 2015 ஆம் ஆண்டு பின்னடைவைச் சந்தித்து 2018 இல் மீண்டெழுந்ததுபோல பொதுஜன பெரமுன கட்சி மீண்டெழும். அதற்கேற்ற வகையில் கட்சி கட்டியெழுப்படும் - என்றார். (அ)

# அரிசி பிரச்னைக்கு தீர்வு காணாமல் அரசு தொடர்ந்தும் அசமந்தப்போக்கு!

## அரிசி தொழிற்துறை சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 04

அரிசி பிரச்சினைக்கு உரியத் தீர்வை வழங்காது அரசாங்கம் தொடர்ந்தும் அசமந்த போக்குடன் செயற்படுவதாக அகில இலங்கை அரிசி தொழிற்துறையினரின் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை அரிசி தொழிற்துறையினர் சங்கத் தலைவர் நிஷாந்த பண்டார இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, உள்ளூர் வகை அரிசி தம்மிடம் தாராளமாக இருப்பதாகவும் அதில் எந்தவித சிக்கலும் இல்லை எனவும் யாழ்ப்பாண வணிகர் கழக உப செயலாளர் ந.ஜெகன் மோகன் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி அரிசியிலேயே தற்போது பிரச்னை நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் தற்போது அமுல்படுத்தியுள்ள கட்டுப்பாட்டு விலை காரணமாகவே தற்போது அரிசிக்கான பிரச்சினை நிலவுகின்றது.

கொழும்பில் கொள்வனவு செய்யும் அரிசியை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லும்போது அதற்குப் போக்குவரத்து கூலி உள்ளிட்ட செலவுகள் ஏற்படுகின்றன.

அதிகரித்த விலைக்கு அரிசியைக் கொண்டு சென்று எவ்வாறு அதனைக் கட்டுப்பாட்டு விலைக்குள் விற்பனை செய்ய முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனை அரசாங்கம் கவனத்திற்கு எடுத்துச் செயல்படவேண்டும். அதேநேரம், சம்பா, கீரி சம்பா, வெள்ளை, பச்சை அரிசி விற்பனையிலிருந்து தாங்கள் தற்காலிகமாக விலகி இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ். வணிகர் கழக உப செயலாளர் ந.ஜெகன் மோகன் தெரிவித்தார். (அ)

# ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாராக தலதா!

கொழும்பு, ஜன. 04

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி தலதா அத்துக்கோரள நியமிக்கப்பட்டுள்ளார்.



முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். (அ)

# மனோ-ஜூலி சங் சந்திப்பு!

கொழும்பு, ஜன. 04

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இனப்பிரச்னை தீர்வுக்கான நகர்வு, அதிகார பகிர்வு, மலையக பெருந்தோட்ட காணி உரிமை, சட்டத்தின் ஆட்சி, பொருளாதார சவால்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய தலைப்புகளின் கீழ் இதன்போது கலந்துரையாடல் இடம் பெற்றதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org